# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



219

217 12/11/2020

RPAD

A 8 9 10 11

அனுப்புநர்,
திரு.கி.சந்திரசேகர்,B.E., M.T.P.,
துணை இயக்குநர் (பொ)/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
124, ஜி.எஸ்.டி.ரோடு
நகராட்சி வணிக வளாகம்,
செங்கல்பட்டு மாவட்டம் 1.
Email : ddcgldistrict@gmail.com

பெறுநர்:
தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
பட்டிப்புலம் ஊராட்சி/ கிராமம்,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

ந.க.எண்.76/2020 மாஉதிகு (செ.மா-5) நாள். .11.2020

அய்யா,

பொருள் : தொகுப்பு குடியிருப்புக் கட்டிடம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், பட்டிபுலம் ஊராட்சி - சாலுவான் குப்பம் கிராமம் - நில அளவு எண்கள்.15/4ஏ, 5ஏ ; 20/1, 4ஏ, 4பி, 5ஏ, 6ஏ ; 21/1, 2, 3ஏ, 3பி, 4ஏ, 4பி, 5ஏ, 5பி, 6ஏ, 6பி, 7, 8, 9ஏ, 9பி, 10, 11, 12, 13ஏ, 13பி, 13சி, 13டி, 14, 15, 16, 17, 18பி2, 20பி, 20சி, 21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையில் - தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட (Stilt + 4 Floor) உபயோக கட்டுமானத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட திட்ட அனுமதி எண். 5/(1 முதல் 8 வரை)/2015-க்கு திட்ட அனுமதிக்கான கால நீட்டிப்பு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.20149/2013 பிஏ2 நாள். 23.05.2014.
2. உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.644/2013 மாஉதிகு, நாள்.10.03.2015.
3. மனுதாரர் Ms. Daffodil Techno India Foundations (Pvt) Ltd.,, அவர்களின், காலநீட்டிப்பு கோரிக்கை கடிதம் நாள். 31.01.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 25437/14/GR நாள். 06.06.2017.
5. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.186/2018 மாஉதிகு நாள்.23.12.2018. திட்ட அனுமதிக்கான கால நீட்டிப்பு இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது.
6. மனுதாரர் Ms. Daffodil Techno India Foundations (Pvt) Ltd.,, அவர்களின், காலநீட்டிப்பு கோரிக்கை கடிதம் பெறப்பட்ட நாள். 20.01.2020.
7. அரசாணை (நிலை) எண்:69, H & UD (UD 4 - 3) Dept. நாள்:28.05.2019.
8. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:7866/2020/ TCP-5 நாள்:27.10.2020.

******

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் நடவடிக்கை கடிதத்தில் மேற்படி உத்தேசத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு 10.03.2015 முதல் 09.03.2018 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 3-ல் காணும் மனுதாரர் கடிதம் 31.01.2018 -ன் மூலம் கால நீட்டிப்பு கோரி விண்ணப்பம் பெறப்பட்டதை தொடர்ந்து பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களின் நடவடிக்கை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி உத்தேசத்திற்கு 10.03.2018 முதல் 09.03.2020 வரை இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்து திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 6-ல் கண்ட மனுதாரர் கடிதம் நாள்:07.01.2020 -ல் மீண்டும் கால நீட்டிப்பு கோரி விண்ணப்பித்துள்ளதனை தொடர்ந்து இவ்வலுவலக கடிதம் நாள்:10.06.2020-ன் மூலம் காலநீட்டிப்பு வழங்குவது குறித்து தெளிவுரை வேண்டி நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் பார்வை 8 -ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் கடிதத்தில் பார்வை 7 -ல் காணும் அரசாணையில் கண்டுள்ளபடி மனுதாரர் உத்தேசத்திற்கான திட்ட அனுமதி காலத்தினை 10.03.2020 முதல் திட்ட அனுமதி காலநீட்டிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து மேற்படி உத்தேசத்திற்கு, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு எண் 50-ன்படி 10.03.2020 முதல் 09.03.2023 வரையிலான மூன்று வருடத்திற்கு இறுதியாக திட்ட அனுமதி காலநீட்டிப்பு செய்து வழங்கப்படுகிறது.

1. பார்வை 1-ல் கண்ட செயலாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இத்திட்ட அனுமதி கால நீட்டிப்பிற்கு பொருந்தும்.
2. உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளன.

மனுதாரர் மேற்கொண்டு பட்டிப்புலம் ஊராட்சி/ கிராமம் தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பட்டிப்புலம் ஊராட்சி/ கிராமம், தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

துணை இயக்குநர்(பொ)/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
12/11/20. 12/11/20.

நகல்
M/s.Daffodil Techno India Foundations (P) Ltd.,
'C' First Floor, II 53, Second Main Road,
R.A.Puram, Chennai - 600 028.

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

219 P1.P



நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம்,
807, அண்ணா சாலை, சென்னை -02.

நாள் :27.10.2020.

ந.க.எண்.7866/2020/TCP-5

பொருள்: திட்ட அனுமதி கால நீட்டிப்பு - தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், புட்டிபுலம் ஊராட்சி, சாலுவான் குப்பம் கிராமம், நில அளவை எண்கள்.15/4ஏ, 5ஏ; 20/1, 4ஏ, 4பி, 5ஏ, 6ஏ; 21/1, 2, 3ஏ, 3பி, 4ஏ, 4பி, 5ஏ, 5பி, 6ஏ, 6பி, 7, 8, 9ஏ, 9பி, 10, 11, 12, 13ஏ, 13பி, 13சி, 13டி, 14, 15, 16, 17, 18பி2, 20பி, 20சி, 21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 சமீ பரப்பு கொண்ட தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட (Stilt + 4 Floor) உபயோக கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி எண்.5/(1 முதல் 8 வரை) 2015-க்கு திட்ட அனுமதிக்கான கால நீட்டிப்பு கோரப்பட்டது - கால நீட்டிப்பு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. மனுதாரர் M/s.Daffodil Techno India Foundations (P) Ltd., அவர்கள் கடிதம், நாள்.07.01.2020.
2. துணை இயக்குநர்(பொ) / உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் ந.க.எண்.76/2020/மாஉதிகு, நாள்.10.06.2020.
3. உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் முன்னிலைக் கடிதம், ந.க.எண்.644/2013/மாஉதிகு, நாள்.10.03.2015.
4. உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் முன்னிலைக் கடிதம் ந.க.எண்.186/2018/மாஉதிகு, நாள்.23.02.2018.
5. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.25437/14/GR, நாள்.06.06.2017.
6. அரசாணை எண்.69, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.28.05.2019.

-----

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வை 3-ல் சுட்டிய உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் முன்னிலைக் கடிதம் மூலம் மேற்படி உத்தேசத்தினை 10125.15 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு A1 முதல் A40 வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் கட்டிட வரைபடங்களுக்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49(i)(ii)(iii)-ன் கீழ் திட்ட அனுமதி எண்.51 (1 முதல் 8 வரை) / 2015 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் , நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து 10.03.2015 முதல் 09.03.2018 வரை செல்லத்தக்கது என தெரிவிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து பார்வை 5-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதன்படி

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-பிரிவு-50-ன்படி பார்வை 4-ல் சுட்டிய உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கடிதம் மூலம் 10.03.2018 முதல் 09.03.2020 வரை திட்ட அனுமதி கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை 1-ல் சுட்டிய கடிதம் மூலம் மனுதாரர் மேலும் மூன்று வருடங்களுக்கு திட்ட அனுமதி கால நீட்டிப்பு கோரி விண்ணப்பிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர், செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்கள் கடிதம் மூலம் பெறப்பட்ட கடிதம் மற்றும் இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 6-ல் சுட்டிய அரசாணையின்படி திட்ட அனுமதி கால நீட்டிப்பு கோரிக்கை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஏற்கப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மனுதாரரின் உத்தேசத்திற்கு 10.03.2020 முதல் 09.03.2023 வரை திட்ட அனுமதி கால நீட்டிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர், செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு இயக்குநர் (மு.கூ.பொ)க்காக

<u>பெறுநர்</u>

துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர்,
செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

<u>நகல்</u>

M/s.Daffodil Techno India Foundations (P) Ltd.,
'C'1-First Floor,
II 53, Second Main road,
R.A.Puram, Chennai-600 028.

TS.

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.

உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.வி.எம். ராஜேந்திரன் பி.இ.,

நாள் : 23.02.2018

ந.க.எண்.186 / 2018 மாஉ திகு

பொருள்: கட்டிட வரைபடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்- மாமல்லபுரம்- காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், பட்டிபுலம் ஊராட்சி - சாலுவான் குப்பம் கிராமம் - நில அளவு எண்கள்.15/4ஏ, 5ஏ ; 20/1, 4ஏ, 4பி, 5ஏ, 6ஏ ; 21/1, 2, 3ஏ, 3பி, 4ஏ, 4பி, 5ஏ, 5பி, 6ஏ, 6பி, 7, 8, 9ஏ, 9பி, 10, 11, 12, 13ஏ, 13பி, 13சி, 13டி, 14, 15, 16, 17, 18பி2, 20பி, 20சி, 21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையில் - தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட (Stilt + 4 Floor) உபயோக கட்டுமானத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட திட்ட அனுமதி எண். 5/(1 முதல் 8 வரை)/2015-க்கு திட்ட அனுமதி கால நீட்டிப்பு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.644/2013 மாஉ திகு நாள்.10.03.2015.
2. மனுதாரர் Ms. Daffodil Techno India Foundations (Pvt) Ltd., Chennai கடிதம் Ref mlpa/PD/01/2018 Date.31.01.2018
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 25437/14/GR நாள். 06.06.2017.

********

உத்தரவு:

பார்வை 1-ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், பட்டிபுலம் ஊராட்சி - சாலுவான் குப்பம் கிராமம் - நில அளவு எண்கள்.15/4ஏ, 5ஏ ; 20/1, 4ஏ, 4பி, 5ஏ, 6ஏ ; 21/1, 2, 3ஏ, 3பி, 4ஏ, 4பி, 5ஏ, 5பி, 6ஏ, 6பி, 7, 8, 9ஏ, 9பி, 10, 11, 12, 13ஏ, 13பி, 13சி, 13டி, 14, 15, 16, 17, 18பி2, 20பி, 20சி, 21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 சதுர மீட்டர் மனையிடப் பரப்பில் தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட (Stilt + 4 Floor) அமையும் மனைக்கு "A1 முதல் A40" என எல்லையிடப்பட்டு ம.வ/மாஉ திகு எண்.5/2015 என எண்ணிட்டு மனையிட, ஒப்புதலும் கட்டிட வரைபடங்களுக்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49(i)(ii)(iii)-ன் கீழ் திட்ட அனுமதி எண். 5(1 முதல் 8 வரை)/2015 என எண்ணிட்டு திட்ட அனுமதியும், நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 50-ன் படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து 10.03.2015 முதல் 09.03.2018 வரை செல்லத்தக்கது என தெரிவிக்கப்பட்டது.

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.

Director

தபியா

1/2 →

பார்வை 2-ல் கண்ட மனுதாரர் கடிதத்தில் கோரியதற்கிணங்க பெறப்பட்ட இணைப்புகள் மற்றும் வரைபடங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு பார்வை 3-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன் படி இந்த திட்ட அனுமதி கால நீட்டிப்பு 10.03.2018 முதல் 09.03.2020 வரை உள்ள காலத்திற்கு மட்டுமே கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது.

1. பார்வை 1-ல் கண்ட செயலாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இத்திட்ட அனுமதி கால நீட்டிப்பிற்கும் பொருந்தும்.
2. உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளன.

23.2.18

உறுப்பினர் செயலர் (பொ)
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்

23/2/18

**இணைப்பு**
திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள்-2

**பெறுநர்,**
M/s.Daffodil Techno India Foundations (Pvt) Limited,
C' 1, First Floor, No.53, Second Main Road,
R.A.Puram, Chennai - 600 028.

**நகல்**
தனி அலுவலர், பட்டிபுலம் ஊராட்சி மன்றம்,
திருப்போரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

225

11:2

## உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை : கி.சண்முகம், எம்.இ.,

ந.க.எண்.644 / 2013 மாஉதிகு நாள் :10 .03.2015

பொருள் : தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும பகுதி - காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்போரூர் வட்டம் - பட்டிபுலம் ஊராட்சி - சாலுவான் குப்பம் கிராமம் - நில அளவு எண்கள்.15/4ஏ, 5ஏ ; 20/1, 4ஏ, 4பி, 5ஏ, 6ஏ ; 21/1, 2, 3ஏ, 3பி, 4ஏ, 4பி, 5ஏ, 5பி, 6ஏ, 6பி, 7, 8, 9ஏ, 9பி, 10, 11, 12, 13ஏ, 13பி, 13சி, 13டி., 14, 15, 16, 17, 18பி2, 20பி. 20சி, 21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையில் - தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட (Stilt + 4 Floor) கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை

1. மனுதாரர் Daffodil Techno India Foundations (P) Ltd., அவர்களின் கடிதம் நாள் 05.06.2013 மற்றும் 09.01.2014
2. தலைவர், பட்டிபுலம் ஊராட்சி கடிதம் நாள் 07.06.2013
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண்.20149/2013 பிஏ2, நாள் 23.05.2014
4. 140-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண்.1, நாள் 27.02.2015
5. அரசாணை (நிலை) எண்.86 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்28.03.2012.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.7486/09 பிஏ2, நாள் 16.04.2009
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009 பிஏ1, நாள் 04.04.2012
8. அரசாணை (2டி) எண்.114 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 19.08.2011.
9. அரசாணை (2டி) எண்.39 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 08.05.2013
10. கோட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு பணிகள் காஞ்சிபுரம் அவர்களின் தடையின்மைச் சான்று ஒ.மு.எண்.4483/ஆ/2012, நாள் 12.04.2012.
11. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 02.06.2014 மற்றும் 14.11.2014 (அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சிக் கட்டணம், நன்னிலைவரிக் கட்டணங்கள் மற்றும் OSR ஒப்படைக்க கோரியது).
12. மனுதாரர் Daffodil Techno India Foundations (P) Ltd., அவர்களின் கடிதம் நாள் 05.11.2014 மற்றும் 20.11.2014 (அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சிக் கட்டணம், நன்னிலைவரிக் கட்டணங்கள் மற்றும் OSR ஒப்படைத்தது)

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

*****

**உத்திரவு**

தொகுப்பு குடியிருப்பு கட்டிடம், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், பட்டிபுலம் ஊராட்சி, சாலுவான் குப்பம் கிராமம், நில அளவு எண்கள்.15/4ஏ, 5ஏ ; 20/1, 4ஏ, 4பி, 5ஏ, 6ஏ ; 21/1, 2, 3ஏ, 3பி, 4ஏ, 4பி, 5ஏ, 5பி, 6ஏ, 6பி, 7, 8, 9ஏ, 9பி, 10, 11, 12, 13ஏ, 13பி, 13சி, 13டி., 14, 15, 16, 17, 18பி2, 20பி, 20சி, 21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்திற்கு 'A1' முதல் 'A40' வரை என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் கீழ்க்கண்டவாறு தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட கட்டுமானங்களின் பரப்பு அமைகிறது.

11.3

மனையின் மொத்தப் பரப்பு 10125.15 சதுர மீட்டர்

| விவரம் | FSI Area | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிளாக் ஏ | | |
| ஸ்டில்ட் தளம் | 653.91 சமீ | வாகன நிறுத்துமிடம் மற்றும் Electrical Room, Gym Room etc. |
| முதல் தளம் | 1961.69 சமீ | 32 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | 1961.69 சமீ | 32 குடியிருப்புகள் |
| 3-ம் தளம் | 1961.69 சமீ | 32 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | 2109.67 சமீ | 32 குடியிருப்புகள் |
| பிளாக் ஏ -Total | 8648.65 சமீ | 128 குடியிருப்புகள் |
| பிளாக் - பி | | |
| ஸ்டில்ட் தளம் | --- | வாகன நிறுத்துமிடம் |
| முதல் தளம் | 1640.00 சமீ | 27 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | 1640.00 சமீ | 27 குடியிருப்புகள் |
| 3-ம் தளம் | 1640.00 சமீ | 27 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | 1806.02 சமீ | 27 குடியிருப்புகள் |
| பிளாக் பி -Total | 6726.02 சமீ | 108 குடியிருப்புகள் |
| பிளாக்-சி (EWS) | | |
| ஸ்டில்ட் தளம் | --- | வாகன நிறுத்துமிடம் |
| முதல் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| 3-ம் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| பிளாக் சி EWS -Total | 1481.72 சமீ | 44 குடியிருப்புகள் |
| Club House Block | | |
| தரைதளம் | 107.51 சமீ | |
| முதல் தளம் | 154.59 சமீ | |
| மொத்தம் | 262.10 சமீ | |
| Swimming Pool Area | 188.38 சமீ | |

OSR Area : 1013.37 சமீ - 10.01%

மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை : 128 + 108 + 44 = 280 குடியிருப்புகள் (பிளாக் ஏ + பி + சி)

பார்வை 3-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதத்தில் மேற்கண்ட உத்தேச கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் திட்ட அனுமதி வழங்க , நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ / ந.ஊ.இ.எண்.63/2014 என எண்ணிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

பார்வை 4-ல் கண்ட மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் 140-வது கூட்ட தீர்மானத்தின்படி உத்தேச கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்குவதற்கு பார்வை 5-ல் கண்ட அரசாணையின்படி பார்வை 11-ல் கண்ட இவ்வலுவலக கடிதங்கள் மூலம் மனுதாரரிடம் பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு கட்டணம், அபிவிருத்தி கட்டணம் மற்றும் நன்னிலை வரி கட்டணம் ஆகியவை செலுத்தக் கோரப்பட்டது.

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.

Director

227

11.4

மனுதாரர் உத்தேசத்திற்குரிய அனைத்து கட்டணங்களையும் அரசுக்கு பின்வருமாறு செலுத்தி அதற்கான அசல் நகல் பார்வை 12-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் இணைத்து பெறப்பட்டுள்ளது. மேலும் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண்.1 முதல் 15 வரை உள்ள 1013.37 சமீ பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் மற்றும் வரிசை எண்.16 முதல் 19 வரை உள்ள அணுகுசாலை இடத்தையும் தானமாக பத்திர பதிவு செய்து சம்மந்தப்பட்ட பட்டிபுலம் ஊராட்சிக்கு ஆவணம் எண்.9938/2014, நாள் 11.07.2014-ல் ஒப்படைக்கப்பட்டு அதற்கான தானப்பத்திர நகல் பெறப்பட்டுள்ளது.

1. அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு கட்டணம் ரூ.65,10,000/- SBI Chengalpattu Branch நாள் 06.11.2014-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு விவரம் பெறப்பட்டுள்ளது. மற்றும் 6% காலதாமத கட்டணம் ரூ.1,79,100/-ஐ செங்கல்பட்டு கிளையில் 19.11.2014-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.
2. அபிவிருத்தி கட்டணம் ரூ.3,28,750/- Bank of India, Mylapore Branch வரைவோலை எண்.060085, நாள் 30.10.2014-ல் பெறப்பட்டுள்ளது. மற்றும் 6% காலதாமத கட்டணம் ரூ.9,100/-க்கான Bank of India, Mylapore Branch வரைவோலை எண்.060132, நாள் 19.11.2014 பெறப்பட்டுள்ளது.
3. நன்னிலை வரி ரூ.33,500/- State Bank of India Chengalpattu Branch-ல் 06.11.2014-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு விவரம் பெறப்பட்டுள்ளது. மற்றும் 6% காலதாமத கட்டணம் ரூ.1000/-ஐ SBI, Chengalpattu Branch, 19.11.2014-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.

Director

மனுதாரரிடமிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டு, அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளதால், உத்தேச தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட உபயோக கட்டுமானங்கள் அமையும் மனையிடத்திற்கு **ம.வ./மா.உ.தி.கு.எண்.5/2015** என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், மேற்படி கட்டிட வரைபடங்களுக்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49(i) (ii) (iii)-ன் கீழ் **திட்ட அனுமதி எண்.5(1 முதல் 8 வரை)/2015** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன் படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து **10.03.2015 முதல் 09.03.2018 வரை** மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. பொது ஒதுக்கீடு திறவிடம் மற்றும் அணுகுசாலை இடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014 சிபி, நாள் 04.07.2014-ன் படி "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

11.5

**நிபந்தனைகள்**

1. உத்தேச தொகுப்பு குடியிருப்புகள் Club House Block உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341, ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 3.11.2004-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்கவேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகல் மற்றும் இவ்வாணையின் நகல் வழங்குபவர்களுக்கு வழங்கவேண்டும்.
13. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு பட்டிபுலம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பட்டிபுலம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

1-7-11

உறுப்பினர் செயலர் (பொ)
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
செங்கல்பட்டு.

**இணைப்பு :**
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

**பெறுநர்**
தலைவர், பட்டிபுலம் ஊராட்சி மன்றம்,
திருப்போரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல் :**
M/s.Daffodil Techno India Foundations (P) Limited,
'C' 1, First Floor, No.53, Second Main Road,
R.A.Puram, Chennai - 28.

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

2 B

229

Page - 1/2

19

செல் : 944489367

# பட்டிபுலம் ஊராட்சி மன்றம்

## திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

## காஞ்சிபுரம் மாவட்டம்

**A. பன்னீர்செல்வம்**
தலைவர்

3/36, மாதாகோயில் தெரு,
பட்டிபுலம் - 603 104,
பட்டிபுலம் ஊராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நாள் : 10/4/2015

பெறுநர்
M/s.Daffodil Techno India Foundations (P) Limited,
'C' 1, First Floor, No.53, Second Main Road,
R.A.Puram, Chennai – 28.

பொருள் : தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும பகுதி - காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்போரூர் வட்டம் - பட்டிபுலம் ஊராட்சி - சாலுவான் குப்பம் கிராமம் - நில அளவு எண்கள். 15/4 ஏ, 5 ஏ : 20/1, 4 பி, 5 ஏ, 6ஏ ; 21/1, 2, 3ஏ, 3பி, 4ஏ, 4பி, 5ஏ, 5பி, 6ஏ, 6பி, 7,8, 9ஏ, 9 பி, 10, 11, 12, 13ஏ, 13பி, 13சி, 13 டி, 14,15, 16, 17, 18பி2, 20பி, 20 சி, 21 சி 2 மற்றும் 21/21 டி-ல் 10125.15 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையில் - தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club House Block கொண்ட (Stilt + 4 Floor) கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை : 1) தலைவர் பட்டிபுலம் ஊராட்சி மன்றம் கட்டிட அனுமதி கடிதம் எண். தேதி : .03.2015
2) ந.க.எண். 644/2013 மாஉதிகு நாள் : 10.03.2015 படி பார்வை item 1-12 வரை

M/s.Daffodil Techno India Foundations (P) Limited, நிறுவனத்திடம் இருந்து பட்டிபுலம் ஊராட்சி அனுமதி Levy fees Rs.279,434 (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து நானூற்றி முப்பத்தி நான்கு) ~~Bank of India~~ CORPORATION BANK Mylapore Branch வரைவோலை எண் : 666374 தேதி 30/3/15 The President Pattipulam Panchayat, பெறப்பட்டு Chalan மூலம் வங்கியில் செலுத்தப்பட்டது.

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் பகுதி, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு அலுவலகம் உத்தரவின்படி பட்டிபுலம் ஊராட்சி ஒப்புதல் அளித்து அனுமதி எண் 5 (1 முதல் 8 வரை) 2015 வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
மனையின் மொத்த பரப்பு - 10125.15 sqft. mtr.

OSR Area (பொதுத் திரவிடம்) : 1013.37 சமீ - 10.01 %
மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை : 128 + 108 + 44 = 280 குடியிருப்புகள் (பிளாக் ஏ + பி + சி) மொத்த கட்டுமான பரப்பு 17306.87 sq. meter (186, 289, 56 சதுர அடி)

### கட்டுமான விபரம்

| விவரம் | FSI Area | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| | பிளாக் ஏ | |
| ஸ்டில்ட் தளம் | 653.91 சமீ | வாகன நிறுத்துமிடம் மற்றும் Electrical Room, Gym Room etc. |
| முதல் தளம் | 1961.69 சமீ | 32 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | 1961.69 சமீ | 32 குடியிருப்புகள் |

For DAFFODIL TECHNO INDIA FOUNDATION (P) LTD.
Director.

திருப்போரூர் ஒன்றியம் பட்டிபுலம் ஊராட்சி மன்றம் நாள் காஞ்சிபுரம் மாவட்டம்

A. Pannee 10/4/15
தலைவர்
52, 53, பட்டிபுலம் ஊராட்சி மன்றம்
திருப்போரூர் ஒன்றியம்

Page - 2/2

செல் : 9444893679

# பட்டிபுலம் ஊராட்சி மன்றம்

## திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

## காஞ்சிபுரம் மாவட்டம்

A. பன்னீர்செல்வம்
தலைவர்

3/36, மாதாகோயில் தெரு,
பட்டிபுலம் - 603 104.
பட்டிபுலம் ஊராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நாள் : 10/4/2015

| | | |
|---|---|---|
| 3-ம் தளம் | 1961.69 சமீ | 32 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | 2109.67 சமீ | 32 குடியிருப்புகள் |
| பிளாக் ஏ கூடுதல் | 8648.65 சமீ | 128 குடியிருப்புகள் |
| பிளாக் பி | | |
| ஸ்டில்ட் தளம் | --- | வாகன நிறுத்துமிடம் |
| முதல் தளம் | 1640.00 சமீ | 27 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | 1640.00 சமீ | 27 குடியிருப்புகள் |
| 3-ம் தளம் | 1640.00 சமீ | 27 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | 1806.02 சமீ | 27 குடியிருப்புகள் |
| பிளாக் பி கூடுதல் | 6726.02 சமீ | 108 குடியிருப்புகள் |
| பிளாக் சி (EWS) | | |
| ஸ்டில்ட் தளம் | --- | வாகன நிறுத்துமிடம் |
| முதல் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| 3-ம் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | 370.43 சமீ | 11 குடியிருப்புகள் |
| பிளாக் சி EWS கூடுதல் | 1481.72 சமீ | 44 குடியிருப்புகள் |
| Club House Block | | |
| தரை தளம் | 107.51 சமீ | |
| முதல் தளம் | 154.59 சமீ | |
| மொத்தம் | 262.10 சமீ | |
| Swimming Pool Area | 188.38 சமீ | |

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

குறிப்பிட்ட சிறப்பு நிபந்தனைகளை மற்றும் நிபந்தனைகளின்படி ஊராட்சி மன்றம் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. சிறப்பு நிபந்தனைபடி பொதுதிரவிடம் மற்றும் அணுகுசாலை (OSR land & approach Road) இடத்தை ஊராட்சியிடம் இருந்து பெற்று பராமரிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

இப்படிக்கு,

A. Panneer 10/4/2015
தலைவர்
52, 53, பட்டிபுலம் ஊராட்சி மன்றம்
திருப்போரூர் ஒன்றியம்

திருப்போரூர் ஒன்றியம் பட்டிபுலம் ஊராட்சி மன்றம் காஞ்சிபுரம் மாவட்டம் நாள்

இணைப்புகள்
ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

நகல் : உறுப்பினர் செயலர் (பொ)
MLPA, Chengalput.

237



நகர் ஊரமைப்பு ஆணையர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை, சென்னை- 600 002.
முன்னிலை: திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப.,
www.tn.gov.in/dtcp
Email Id: dtcp@vsnl.net

நாள்.23.05.2014

ந.க.எண்.20149/2013/பிஏ2

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் - காஞ்சிபுரம் மாவட்டம் - செங்கல்பட்டு வட்டம் - பட்டிபுலம் ஊராட்சி - சாலுவான் குப்பம் கிராமம் - நி. அ. எண்கள்.15/4ஏ,5ஏ; 20/1,4ஏ,4பி,5ஏ,6ஏ;21/1,2,3ஏ,3பி,21/4ஏ,4பி,5ஏ,5பி,6ஏ,6பி,7,8,9ஏ, 9பி, 10, 11, 12, 21/13ஏ,13பி,13சி,13டி,14,15,16,17,18பி2,20பி,21/20சி,21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 ச.மீ பரப்பு கொண்ட மனையில் - தொகுப்பு குடியிருப்புகள் மற்றும Club house Block கொண்ட (Stilt+4 floor) கட்டிடம் கட்ட கட்டட/திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் Daffodil Techno India Foundations (P) Ltd கடிதம் நாள் 05.06.2013 மற்றும் 09.01.2014.
2. தலைவர், பட்டிபுலம் ஊராட்சி கடிதம் நாள் 07.06.2013.
3. உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், செங்கல்பட்டு கடிதம் ந.க.எண்.644/2013 மாஉதிகு நாள் 20.06.2013.
4. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.28.03.2012.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள்.04.04.2012.
7. அரசாணை (2டி) எண்.114 வீட்டு வசதி மற்றும் நகர்ப்பு வளர்ச்சி துறை நாள் 19.08.2011.
8. அரசாணை (2டி) எண்.39, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 08.05.2013.
9. கோட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு பணிகள் காஞ்சிபுரம் அவர்களின் தடையின்மை சான்று ஒ.மு.எண்.4483/ஆ/2012 நாள் 12.04.2012.

-----

<u>உத்தரவு:</u>

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் பட்டிபுலம் ஊராட்சி, சாலுவான் குப்பம் கிராமம், நி.அ.எண்கள்.15/4ஏ,5ஏ; 20/1,4ஏ,4பி,5ஏ,6ஏ;21/1,2,3ஏ,3பி,4ஏ,4பி,5ஏ,5பி,6ஏ,6பி,7,8,21/9ஏ,9பி,10,11,12, 13ஏ, 13பி, 13சி,13டி,14,15,16,17,18பி2,20பி,20சி,21/21சி2 மற்றும் 21/21டி-ல் 10125.15 ச.மீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு 'A1 முதல் A40 வரை'' என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும் - அம்மனையில் கீழ்கண்டவாறு தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club house Block கொண்ட கட்டுமானங்களின் பரப்பு விபரங்கள் அமைகிறது.

Technical Clearance issued is valid after payment of is A charge and permission of LPA/NTDA/Respective authority.

For DAFFODIL TECHNO INDIA FOUNDATION PVT. LTD.
Director

(126)



<u>மனையின் மொத்தப் பரப்பு: 10125.15 ச.மீ</u>

<u>பிளாக்-ஏ</u>

| விபரம் | FSI-Area | குடியிருப்புகள் எண்ணிக்கை |
|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | 653.91 ச.மீ | வாகன நிறுத்தும் இடம் மற்றும் Electrical Room,Gym Room etc., |
| முதல் தளம் | 1961.69 ச.மீ | 32 குடியிருப்புகள் |
| 2ம் தளம் | 1961.69 ச.மீ | 32 குடியிருப்புகள் |
| 3ம் தளம் | 1961.69 ச.மீ | 32 குடியிருப்புகள் |
| 4ம் தளம் | 2109.67 ச.மீ | 32 குடியிருப்புகள் |
| பிளாக்-ஏ Total | 8648.65 ச.மீ | 128 குடியிருப்புகள் |

<u>பிளாக்-பி</u>

| | | |
|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | - | வாகன நிறுத்தும் இடம் |
| முதல் தளம் | 1640.00 ச.மீ | 27 குடியிருப்புகள் |
| 2ம் தளம் | 1640.00 ச.மீ | 27 குடியிருப்புகள் |
| 3ம் தளம் | 1640.00 ச.மீ | 27 குடியிருப்புகள் |
| 4ம் தளம் | 1806.02 ச.மீ | 27 குடியிருப்புகள் |
| பிளாக்-பி Total | 6726.02 ச.மீ | 108 குடியிருப்புகள் |

<u>பிளாக்-சி (EWS)</u>

| | | |
|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | - | வாகன நிறுத்தும் இடம் |
| முதல் தளம் | 370.43 ச.மீ | 11 குடியிருப்புகள் |
| 2ம் தளம் | 370.43 ச.மீ | 11 குடியிருப்புகள் |
| 3ம் தளம் | 370.43 ச.மீ | 11 குடியிருப்புகள் |
| 4ம் தளம் | 370.43 ச.மீ | 11 குடியிருப்புகள் |
| பிளாக்-சி (EWS) Total | 1481.72 ச.மீ | 44 குடியிருப்புகள் |

235

12c



Club house Block

| | |
|---|---|
| தரைத்தளம் | 107.51 ச.மீ |
| முதல் தளம் | 154.59 ச.மீ |
| மொத்தம் | 262.10 ச.மீ |
| Swimming pool Area | 188.38 ச.மீ |

For DAFFODIL TECNO INDIA FOUNDATION PVT. LTD.

Director

OSR Area : 1013.37 ச.மீ - 10.01%
மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை: 128+108+44=280 குடியிருப்புகள் (பிளாக் ஏ+பி+சி)

மேற்கண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club house Block உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி/திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ./ந.ஊ.இ.எண்.63/2014 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண்.1 முதல் 15 வரை உள்ள 1013.37 ச.மீ பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் மற்றும் வரிசை எண். 16 முதல் 19 வரை உள்ள அணுகு சாலை இடத்தையும் தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும், சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
2. பொது ஒதுக்கீடு திறவிடம் மற்றும் அணுகு சாலை இடத்தினை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
3. பொது ஒதுக்கீடு திறவிடம் மற்றும் அணுகு சாலை இடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக்கொண்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்துகொள்ளவேண்டும்.
4. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
5. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

நிபந்தனைகள்:

1) உத்தேச தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் Club house Block உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.02-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகல் மற்றும் இவ்வாணையின் நகல் வழங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 4, 5 மற்றும் 6-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல் நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களை மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு:</u>
மூன்று தொகுப்பு வரைபடங்கள்
(3x8=24)

(ஒம்)/- இரா.வெங்கடேசன்
நகர் ஊரமைப்பு ஆணையர் (பொ),

<u>பெறுநர்:</u>
உறுப்பினர் செயலர் (பொ),
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம்,
செங்கல்பட்டு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

26/5/14
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
26/5/14



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate